# லீ கொங் சியன் மேற்கோள் நூலகத்தின் தமிழ்ப் பிரிவும் சேவைகளும்

By Sundari Balasubramaniam, Reference Librarian, Lee Kong Chian Reference Library



## முன்னுரை

இன்று "லீ கொங் சியன் மேற்கோள் நூலகம்" என்று பெயர் மாற்றம் பெற்று பெரிய அளவில் இயங்கும் இந்நூலகம், 1951ல் சிறிய அளவில் துவங்கப்பட்டுப் பிறகு விரிவடைந்து 1960ல் தேசிய மேற்கோள் நூலகம் என்ற பெயருடன் தனி நூலகமாக ஸ்டாம்போர்ட் சாலையில் இயங்க ஆரம்பித்தது. செப்டம்பர் 2003 ஆம் ஆண்டில் "லீ தர்ம ஸ்தாபனம்" தேசிய நூலகத்தை நாட்டின் மைய அறிவுக்கூடமாக மேம்படுத்ததுவதற்கு $60 மில்லியன் வெள்ளியை நன்கொடையாக அளித்தது. லீ ஸ்தாபனத்தின் நோக்கைச் செயல்படுத்தவும், அந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்த டாக்டர் லீ கொங் சியன் அவர்களின் பெயரை என்றும் நிலைத்திருக்கச்செய்யவும், தேசிய மேற்கோள் நூலகம் "லீ கொங் சியன் மேற்கோள் நூலகம்" என்ற புதுப்பெயருடன் இன்று 16 மாடி கட்டடத்தில் 60,000 சதுர மீட்டர் பரப்பளவில் ஆய்வு, மேற்கோள் பணிகளுக்கு உதவும் சிறப்பான புத்தகங்கள், கணினி வட்டுகள் என 819,000 பொருட்களுக்கு மேல் கொண்ட ஒரு சிறந்த நூலகமாக புதுப்பொலிவுடன் செயல்பட்டுவருகிறது. பொதுமக்கள், அரசாங்கத் துறைகள், தகவல் துறைகள், மாணவர்கள், ஆய்வாலர்கள் மட்டுமல்லாது அனைத்துத் துறையைப் பற்றிய தகவல் நாடி வருபவர்களும் பயனடையுமாறு ஒரு மிகப்பெரிய தகவல் மையமாக இது இயங்கும்.

## நூலக அமைப்பு

மேற்கோள் நூலகம் 7 முதல் 13 வரையுள்ள தளங்களில் இயங்குகிறது. 7ஆம் தளத்தில் சமூகவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் தொகுப்புகள் வைக்கப்பட்டுள்ளன. 8ஆம் தளத்தில் கலைகள் மற்றும் வர்த்தகம் பற்றிய தொகுப்புகள் வைக்கப்பட்டுள்ளன. 9ஆம் தளத்தில் மொழித் தொகுப்புகளும், 10ஆம் தளத்தில் ஆசிய சிறுவர்களின் தொகுப்பு மற்றும் நன்கொடையாளர்களின் தொகுப்புகளும், 11, 12ஆம் தளங்களில் சிங்கப்பூர் மற்றும் தெற்காசிய நாடுகளின் தொகுப்புகளும், செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் மற்றும் அரிய படைப்புகளின் படச்சுருள்களும் வைக்கப்பட்டுள்ளன. 13ஆம் தளத்தில் சிங்கப்பூரைப் பற்றிய பல அரிய படைப்புகள், வரைபடங்கள், கடிதங்கள், கையெழுத்துப்பிரதிகள், புத்தகங்கள் என பலத் தொகுப்புகள் வைக்கப்பட்டுள்ளன.

*புத்தகத் தொகுப்புகள் வைக்கப்பட்டுள்ள முறை*

| தள எண் | தொகுப்புகள் |
|---|---|
| 7 | சமூகவியல், மனிதயியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தொகுப்புகள் |
| 8 | கலைகள் மற்றும் வணிகவியல் தொகுப்புகள் |
| 9 | சீன, மலாய், தமிழ்த் தொகுப்புகள் |
| 10 | நன்கொடைத் தொகுப்புகள், மற்றும் ஆசிய சிறுவர்த் தொகுப்பு. |
| 11-12 | சிங்கப்பூர் மற்றும் தென்கிழக்காசியத் தொகுப்புகள் |
| 13 | அரியத் தொகுப்புகள் |

9ஆம் தளத்தில் அமைந்துள்ள மொழிப் பிரிவில், தாய் மொழிகளான சீனம், மலாய் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழித் தொகுப்புகளும் வைக்கப்பட்டுள்ளன. ஆய்வுத் தரம் வாய்ந்த இத்தொகுப்புகள் சிங்கப்பூருக்கு மட்டுமின்றி ஆசியா முழுமைக்குமாக பயன்தரும் வகையில் அமைந்துள்ளன.

## தமிழ்த் தொகுப்பு

தமிழ்த் தொகுப்பில் 6800 புத்தகங்கள் மற்றும் 35 சஞ்சிகைகள் அடங்கியத் தொகுப்புகளைக் காணலாம். இத்தொகுப்பில் உள்ள அனைத்து நூல்களும், தமிழ்நாடு, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் பொதுப்பிரிவு, மெய்யியல், சமயம், சமூகவியல், மொழியியல், அறிவியல், கலைகள், இலக்கியம், புவியியல், வரலாறு என எல்லாப் பிரிவுகளிலும் புத்தகங்கள் இருக்கின்றன. உயர்நிலை, தொடக்கக் கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொதுமக்கள் என எல்லாப் பிரிவினருக்கும் ஏற்றவாறு புத்தகங்கள் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

## தமிழ்த் தொகுப்பின் சிறப்பம்சம்

இத்தொகுப்பின் சிறப்பம்சமாக மொழி, கலை, இலக்கியம் ஆகிய மூன்றுப் பிரிவுகளைக் கூறலாம்

*மொழி*

தமிழ் மொழி வரலாறு, சுவடி மொழிப்பெயர்ப்புகள், இலக்கண நூல்கள், அகராதிகள் போன்றவை இத்தொகுப்பில் அடங்கும்.




*கலை*

நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புறப் பாடல்கள், தெருக்கூத்துகள், நாடக வரலாறு, மேடை நாடகம், கர்னாடக இசை வரலாறு, கீர்த்தனைகள், திரைப்பட வரலாறு, திரைப்படத்துறையினரின் நினைவுகள், திரையிசைக் கலைஞர்களின் வரலாறு என பல தகவல்கள் அடங்கிய அரிய புத்தகங்கள் இத்தொகுப்பில் உள்ளன.

*இலக்கியம்*

தமிழ்த் தொகுப்பின் முக்கிய அம்சமாக இலக்கியப்பகுதி விளங்கும். சங்க கால இலக்கியத்திலிருந்து இக்காலம் வரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் சேகரிக்கப்பட்டுள்ளன. சங்க கால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள், இலக்கிய வரலாறுகள், இலக்கிய ஆராய்ச்சி மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், சைவ வைணவ இலக்கியங்கள், பாரதியார், பாரதிதாசனார், அறிஞர் அண்ணா, புதுமைப்பித்தன் மற்றும் தற்போதுள்ள பிரபல எழுத்தாளர்கள் பலரின் இலக்கியப்படைப்புகளுடன், மலேசியா, இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள், பிறமொழிக்கதைகள், என்று பரந்த அளவில் படைப்புகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நிச்சயம் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கும் இத்தொகுப்பு ஒரு சிறந்த கருவூலமாக விளங்கும்.







## சஞ்சிகைகள்

இந்தியா, மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 35 சஞ்சிகைகள் தருவிக்கப்படுகின்றன. இயல், இசை, சினிமா, அரசியல், சமூகம், இலக்கியம், சமயம், வர்த்தகம், கணினி, மருத்துவம் என அனைத்துப் பிரிவுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டத் தரமான சஞ்சிகைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

## சேவைகள்

*மேற்கோள் மற்றும் தகவல் சேவைகள்*

ஆய்வு மேற்கோள் சேவை, தொழில் முனைவர்களுக்கான ஆலோசனை மற்றும் தனிப்பட்ட விருப்பம் பற்றிய ஆலோசனைச் சேவை ஆகியவை நூலகத்தில் நேரடியாக வழங்கப்படும். தேர்ந்த எங்கள் நூலக அதிகாரிகள் மக்களின் கேள்விக்குத் தகுந்த பதில் அளிப்பதோடு, நூலகத்தில் உள்ள புத்தகங்கள், தகவல் தளங்கள் என்று அனைத்துத் தகவல் ஆதாரங்களிலிருந்தும் வேண்டியத் தகவல்களைத் தேட உதவுவர்.

*மேற்கோள் முனை* (Reference Point)
வீட்டிலிருந்தவாரே, ref@nlb.gov.sg என்ற மின் அஞ்சல் முகவரி மூலமாக உங்கள் கேள்விகளை அனுப்பிப் பதில் பெறலாம். அல்லது 65 6332 3248 என்றத் தொலைப்பிரதி மூலமாகவோ, அல்லது 65 6332 3255 என்ற நேரடித் தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு உங்கள் பதிலைப் பெறலாம்.

*ஒலி ஒளித் தொகுப்பு* (Audio-Video Collection)
தொழில், நிர்வாகம், கலை என்று பல பிரிவுகளில் கணினி வட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. ஆர்வலர்கள் இவற்றை உபயோகப்படுத்திப் பயனடையலாம்.

*அணுக இயலா நூல்த் தொகுப்பு* (Closed Access Collection or RCLOS)
சிங்கப்பூர் பற்றியப் பழைய நூல்கள் 12, 13ஆம் தளங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்வையிட விரும்பும் பொதுமக்கள் 11ஆம் தளத்தில் உள்ளத் தகவல் முனையில் விண்ணப்பிக்க வேண்டும்.

*நூலகக் கிடங்கில் உள்ளத் தொகுப்புகள்* (Repository Used Collections or RU)
பழைய நூல்த் தொகுப்புகள் நூலகக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன. இந்நூல்களைப் பார்வையிட விரும்புவோர் எங்களுக்கு விண்ணப்பித்தால் அந்நூல்கள் நூலகத்திற்குக் கொண்டுவரப்படும். இச்சேவைக்கு $1.55 கட்டணமாக வசூலிக்கப்படும்.

*பல்லூடக மையம்* (Multimedia center)
நூலகத்தின் இணைய தளத்தில் 70க்கும் மேற்பட்ட தகவல் தளங்கள் வர்த்தகம், அறிவியல், கலை, தொழில்நுட்பம் மற்றும் பல பிரிவுகளிலும் உள்ளன. ஆர்வலர்கள், நூலக பல்லூடக மையத்தில், இத்தகவல் தளங்களுக்குச் சென்று தேவையான தகவல்களை அறிந்துகொள்ளலாம்.

*கணினியில் அச்சடித்தல்/நகல் எடுத்தல்*
வாடிக்கையாளர்கள் இணைய தளத்திலிருந்து தங்களுக்கு விருப்பமானப் பகுதிகளைக் கணினியில் அச்சடித்துக்கொள்ளலாம். கணினியில் அச்சடிக்க ஒரு A4 பக்கத்திற்கு $0.30 கட்டணம் வசூலிக்கப்படும். கருப்பு வெள்ளை நகல் எடுக்க $0.05 கட்டணமும், வண்ணத்தில் நகல் எடுக்க $0.50 கட்டணமும் வசூலிக்கப்படும். 8, 11 ஆம் தளங்களில் வண்ணத்தில் நகல் எடுக்க வசதியுள்ளது. நுண்சுருளில் இருந்தும் நகல் எடுக்க 11 ஆம் தளத்தில் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

*நூலகம் திறந்திருக்கும் நேரம்*
திங்கள் முதல் ஞாயிறு வரை,
10am - 9pm
(பொது விடுமுறை நாட்களில் நூலகம் மூடியிருக்கும்)

*நூலக முகவரி*

**Lee Kong Chian Reference Library**
**100 Victoria Street #07-01**
**Singapore 188064**
**T +65 6332 3255**
**F +65 6332 3248**
**W www.nlb.gov.sg**